### "நிதி ஆயோக்" கூட்டம்! முதல்வர் மு.க.ஸ்டாலின் உள்ளிட்ட

# 10 முதலமைச்சர்கள் புறக்கணிப்பு!

## பிரதமர் மோடி தலைமையில் நடைபெற்ற கூட்டத்திற்கு எதிர்ப்பு!

புதுடெல்லி, ஜூலை 29-

பிரதமர் மோடி தலைமையில் நடைபெற்ற 'நிதி ஆயோக்' கூட்டத்தை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உட்பட 10 மாநில முதலமைச்சர்கள் புறக்கணித்துள்ளனர்.

நிதி ஆயோக்கின் உயர் நிலை அமைப்பான நிர்வாகக் குழுவின் 9வது கூட்டம், அதன் தலைவரான பிரதமர் மோடி தலைமையில் டெல்லியில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்த கூட்டத்தில் அனைத்து மாநில முதலமைச்சர்களும் பங்கேற்க வேண்டும் என்று ஒன்றிய அரசு கேட்டுக் கொண்டிருந்தது. ஆனால், ஒன்றிய பட்ஜெட்டில் எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களுக்கு நிதி ஒதுக்கப்படாததற்கு எதிர்ப்பு தெரிவித்து இக்கூட்டத்தை புறக்கணிப்பதாக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்திருந்தார்.

அதன்படி, நிதி ஆயோக் கூட்டத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பங்கேற்கவில்லை.

இதேபோல், கர்நாடக முதலமைச்சர் சித்தராமையா, இமாச்சலப்பிரதேச முதலமைச்சர் சுக்விந்தர் சிங், தெலுங்கானா முதலமைச்சர் ரேவந்த் ரெட்டி, பஞ்சாப் முதலமைச்சர் பகவந்த் மான், ஜார்க்கண்டு முதலமைச்சர் ஹேமந்த் சோரன், கேரள முதலமைச்சர் பினராயி விஜயன் ஆகியோரும் நிதி ஆயோக் கூட்டத்தை புறக்கணித்துள்ளனர். பா.ஜ.க. கூட்டணியில் உள்ள புதுச்சேரி முதலமைச்சர் ரங்கசாமியும் இக்கூட்டத்தை புறக்கணித்துள்ளார். டெல்லி ஆம் ஆத்மி அரசும் இந்த கூட்டத்தை புறக்கணித்துள்ளது.

# கழகம் சார்பில் மாபெரும் ஆர்ப்பாட்டம்!

முதல் பக்கத் தொடர்ச்சி

ஒன்றிய நிதிநிலை அறிக்கையில் "மாற்றாந்தாய்ப் போக்குடன் தமிழ்நாட்டை வஞ்சித்த பாசிச பா.ஜ.க. ஒன்றிய அரசைக் கண்டித்து ஜூலை 27 - சனிக்கிழமை அன்று (அதாவது நேற்றைக்கு) காலை 10.00 மணியளவில், மாவட்ட தலைநகரங்களில் தி.மு.க. சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்" நடைபெறும் என தலைமைக் கழகம் அறிவித்தது.

அந்த அறிவிப்புக்கொப்ப தமிழ்நாடெங்கும் மாவட்டத் தலைநகரங்களில் கழகத்தின் சார்பில் மாபெரும் ஆர்ப்பாட்டங்கள் மிகுந்த எழுச்சியுடன் நடைபெற்றது.

இதில் மாவட்டக் கழக நிர்வாகிகள், கழக நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் தலைமையில், கழக முன்னணியினர் முன்னிலையில் நடைபெற்ற இக்கண்டன ஆர்ப்பாட்டத்தில் மாவட்ட, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வட்ட, கிளைக் கழகச் செய லாளர்கள், நிர்வாகிகள், அனைத்து அமைப்புகளில் உள்ள அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் உள்ளிட்ட லட்சக்கணக்கான கழகத்தினர் பங்கேற்று தமிழ்நாடு அரசை வஞ்சிக்கும் ஒன்றிய பாசிச பா.ஜ.க. அரசுக்கு எதிராக முழக்கமிட்டு தங்கள் கண்டனத்தைப் பதிவு செய்தனர்.

### ஒன்றிய பா.ஜ.க. அரசு உணர்ந்து கொள்ள வேண்டும்!

# இதுதான் முதலமைச்சரை நடத்தும் முறையா?

## முதல்வர் மு.க.ஸ்டாலின் கேள்வி!

சென்னை, ஜூலை 29-

பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் புதுடெல்லியில் நேற்று நிதி ஆயோக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தை தமிழ்நாடு முதலமைச்சர் உள்ளிட்ட எதிர்க்கட்சிகளை சேர்ந்த 9 முதலமைச்சர்கள் புறக்கணித்த நிலையில் இக்கூட்டத்தில் மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜி பங்கேற்றார். இந்தக் கூட்டத்தில் முதல்வர் மம்தா பானர்ஜி பேசுவதற்கு வெறும் ஐந்து நிமிடங்களே ஒதுக்கி அதற்குள் பேச்சை முடித்துக் கொள்ளுமாறு நெருக்கடி கொடுக்கப்பட்டுள்ளது. இதனால் மம்தா பானர்ஜி, ஒன்றிய அரசின் பாரபட்சத்தை இனியும் பொறுத்துக் கொள்ள முடியாது எனக்கூறி இந்தக் கூட்டத்திலிருந்து கோபாவேசமாக வெளியேறினார்.

மேற்கு வங்க முதலமைச்சருக்கு நேர்ந்த இந்தச் செயலை கண்டித்துள்ள முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இதுதான் கூட்டுறவு கூட்டாட்சியா? எனவும் இதுதான் ஒரு முதலமைச்சரை நடத்தும் முறையா எனவும் கேள்வி எழுப்பியுள்ளார்.

திராவிட முன்னேற்றக் கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (27.7.2024) வெளியிட்டுள்ள சமூக வலைத்தளப் பதிவு வருமாறு:

**இதுதான் கூட்டுறவுக் கூட்டாட்சியா?**

**இதுதான் ஒரு முதலமைச்சரை நடத்தும் முறையா?**

**எதிர்க்கட்சிகள் என்பவை மக்களாட்சியின் இன்றியமையாத அங்கம் என்றும், அவர்கள் குரல் ஒடுக்கப்பட வேண்டிய எதிரிகள் அல்ல என்றும் ஒன்றிய பா.ஜ.க அரசு உணர்ந்துகொள்ள வேண்டும்.**

**கூட்டுறவுக் கூட்டாட்சியியலுக்கு திறந்த மனதுடனான பேச்சுவார்த்தையும், அனைத்துத் தரப்புக் குரல்களுக்கும் மரியாதையும் அவசியமானவை ஆகும்!**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

# முதல்வர் மு.க.ஸ்டாலின் காணொலியில் விளக்க உரை!...

முதல் பக்கத் தொடர்ச்சி

திட்டங்களைத் அறிவிக்கவில்லை என்பதோடு ஏற்கனவே நடைபெற்று வரும் திட்டங்களுக்கான நிதியையும் குறைக்கும் வஞ்சக முயற்சியில் ஈடுபட்டிருக்கிறது இந்த ஒன்றிய அரசு. இது எல்லாவற்றையும்விடக் கொடுமையான விஷயம் என்னவென்றால், தமிழ்நாடு பள்ளிக்கல்வித்துறையை முடக்கும் வகையில், இருபது ஆண்டுகளுக்கும் மேலாகச் செயல்படுத்தப்பட்டு வரும் 'அனைவருக்கும் கல்வி இயக்கம்' திட்டத்தி ன்கீழ், வழக்கமாக விடுவிக்கப்பட வேண்டிய நிதியைக் கூட நிறுத்தி வைத்துள்ளார்கள். தேசிய கல்விக் கொள்கையைச் செயல்படுத்துவோம் எனக் கையெழுத்து போட்டால்தான் நிதியை விடுவிப்போம் என்று அடம்பிடிக்கிறது ஒன்றிய அரசு.

மாணவ - மாணவிகளின் கல்வி பாழாகுமே... அவர்களுக்குக் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு ஊதியம் வழங்க முடியாத நிலை வருமே என ஒரு துளி கவலைகூட இல்லாமல், தங்களின் கொள்கைத் திணிப்பையும் இந்தித் திணிப்பையும்மட்டுமேமுன்னிறுத்தக் கூடியதாகத்தான் பா.ஜ.க. அரசு இருக்கிறது.

அடுத்து, பட்ஜெட் உரையில் இன்னொன்றும் சொல்லியிருக்கிறார்கள்... "மாநிலங்களால் விதிக்கப்படும் முத்திரைத் தாள் கட்டணத்தைக் குறைப்போம்!" என மாநிலங்களைக் கலந்தாலோசிக்காமலேயே பட்ஜெட்டில் அறிவிக்கிறார், ஒன்றிய நிதி அமைச்சர். ஏற்கெனவே ஜி.எஸ்.டி. வரி விதிப்பு முறையைக் கொண்டு வந்து, மாநிலங்களின் வரி விதிப்பு உரிமையை எடுத்துக்கொண்டார்கள். நான் கேட்பது என்னவென்றால், ஜி.எஸ்.டி.யால் தமிழ்நாட்டுக்கு ஏற்பட்டிருக்கும் இழப்பைச் சரிக்கட்டுவதற்கான 20 ஆயிரம் கோடி ரூபாய் இழப்பீட்டையே இன்னும் அளிக்காத இந்த ஒன்றிய அரசுக்கு, மாநிலங்களின் வரி விதிப்பு முறையை மாற்றி அமைக்கும் அதிகாரத்தை யார் கொடுத்தது?

**மக்களின் மனம் கொந்தளிப்பில் உள்ளது!**

கடந்த பத்தாண்டுகளாக வருமான வரிச்சலுகை இன்றித் தவித்துக்கொண்டு இருக்கும் நடுத்தரக் குடும்பங்களுக்கு, வெறும் 17 ஆயிரத்து 500 ரூபாய் சலுகையை மட்டும் வழங்கி, அந்தச் சலுகையும் பெரும்பான்மையோருக்குக் கிடைக்காமல் செய்துகொண்டு, பெரும் வரிச்சலுகை கொடுத்ததாக மார்தட்டிக் கொள்கிறது இந்த ஒன்றிய அரசு. இது தமிழ்நாட்டைப் பழிவாங்கும் பட்ஜெட் மட்டுமல்ல - ஒட்டுமொத்த இந்திய நாட்டு மக்களையே பழிவாங்கும் பட்ஜெட்! சுயநலத் துக்காக நாற்காலியைக் காப்பாற்றிக் கொள்ளப் போட்டுக்கொண்ட பட்ஜெட் இது!

**மேலும் மேலும் தோல்விகளை சந்திப்பீர்கள்!**

ஒன்றிய அரசுக்குத் தமிழ்நாட்டு மக்களின் குரலாக - ஏன், இந்திய நாட்டு மக்களின் குரலாக ஒன்று சொல்கிறேன்; மேலும் மேலும் தவறு செய்கிறீர்கள்! மேலும் மேலும் தோல்விகளைச் சந்திப்பீர்கள்! இந்திய நாடாளுமன்றத்தின் இரு அவைகளும் கொந்தளிப்பதுபோல, இந்திய மக்களின் மனங்களும் கொந்தளிப்பில் இருக்கிறது! இதற்கு பா.ஜ.க. பதில் சொல்லியே தீர வேண்டும்!

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள், தமது அறிக்கையில் கூறியுள்ளார்.








கழக இளைஞர் அணி செயலாளரும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஈரோடு மாவட்டத்திற்கு வருகை தருவதை முன்னிட்டு ஈரோடு தெற்கு மாவட்டம் மாநகர கழகத்தின் சார்பில் செயற்குழு கூட்டம் மாவட்ட கழக செயலாளரும், அமைச்சருமான சு.முத்துசாமி தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் இளைஞர்கள் பலர் மாவட்ட கழக செயலாளர் சு.முத்துசாமி முன்னிலையில் தங்களை கழகத்தில் இணைத்து கொண்டனர். கழகத்தில் இணைந்த அனைவரையும் சால்வை அணிவித்து வரவேற்றார். கூட்டத்தில் மாநில, மாவட்ட, மாநகர, ஒன்றிய, பகுதி கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள் பலர் கலந்து கொண்டனர்.



அரியலூர் மாவட்டத்தில் ஒன்றிய அரசின் நிதிநிலை அறிக்கையில் தமிழ்நாட்டை வஞ்சித்த பாசிச, பாஜக அரசை கண்டித்து அரியலூர் மாவட்ட கழக அலுவலகத்தின் சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் கழக கொள்கைப் பரப்பு இணை செயலாளர், முனைவர் . இரா.சபாபதிமோகன், கழக சட்டத்திட்ட திருத்தகுழு இணை செயலாளர் சுபா.சந்திரசேகர், சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க.கண்ணன், கழக கொள்கைப் பரப்பு துணை செயலாளர் ச.அ.பெருநற்கிள்ளி, தலைமை செயற்குழு உறுப்பினர் எம்.பி. பாலசுப்ரமணியன் ஆகியோர் கண்டன உரையாற்றினார்கள். உடன் மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள்,கழக தோழர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் பலரும் கலந்துகொண்டனர்.



ஒன்றிய நிதிநிலை அறிக்கையில் தமிழ்நாட்டை வஞ்சித்த பாஜக அரசை கண்டித்து கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட திமுக சார்பாக கிருஷ்ணகிரி புதிய பேருந்து நிலையம் அருகே மாபெரும் கண்டன ஆர்பாட்டம் மாநில மகளிரணி செயலாளர் ஹெலன்டேவிட்சன், மாவட்ட செயலாளர் மதியழகன் எம்எல்ஏ தலைமையில் நடைபெற்றது. இந்த ஆர்பாட்டத்தில் முன்னாள் எம்.பி.க்கள் சுகவனம், வெற்றிச்செல்வன், முன்னாள் எம்.எல்.ஏ. செங்குட்டுவன், மாவட்ட ஊரட்சி குழு தலைவர் மணிமேகலை நாகராஜ், நாகராஜ், மருத்துவர் மாலதிநாராயணசாமி, டேம்.வெங்கடேசன், கோவிந்தசாமி, சந்திரன், சாவித்திரி கடலரசு மூர்த்தி, கதிரவன், பரிதா நவாப், செந்தில், கிருபாகரன், அஸ்லாம், பாலன், நாகராசன், சித்ரா சந்திரசேகர், கோதண்டன், நகரச் செயலாளர் நவாப், ஒன்றிய செயலாளர்கள் கோவிந்தன் , தனசேகரன்,தேங்காய் சுப்பிரமணி, மகேந்திரன், சாந்தமூர்த்தி, ராஜேந்திரன், குணவசந்தரசு , நரசிம்மன், ரஜினி செல்வம் , குமரேசன் , பேரூர் கழக செயலாளர்கள் பாபு , தம்பிதுரை, வெங்கடப்பன், பார்த்திபன், பர்கூர் ச.அன்பரசன், கே.வி.எஸ் சீனிவாசன் மற்றும் பலர் கலந்துகொண்டார்.